REGD No. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 8—7—51 | இதழ் 3.

"நம் கைகளிலே விலங்கு பூட்டி விட்டனர். இரும்புச் சங்கிலிகளால், நம் உடல்களைக் கட்டிப்போட்டுவிட்டனர். வலி தாங்க முடியவில்லை. நாடே, சிறைச்சாலையாகிவிட்டது. ஆனல் அதற்காக நாம் பயப்படவில்லை. என்னைக் கைது செய்யட்டும்—சிறைக்குள்ளே தள்ளட்டும். நான் கவலைப்படப்போவதில்லை. ஒரு நல்ல காரியத்துக்காக நான் உயிரை விட்டால்தான் என்ன? அடக்குமுறைகளைத் தாங்கிக் கிடப்பதிலும் இந்த உயிர் போனல்தான் என்ன?"

* * *

உயிர் போகட்டும்! வீராவேசத்தோடு பேசினர். எதிரே கூடியிருந்தோர் இதயங்களெல்லாம், கடலலை போலப் பொங்கின. "இந்த வாலிபன் யார்?" என்று கேட்டனர். "என்ன வீரம்!" என்று புகழ்ந்தனர். 'ஆகா!' என்ற ஆரவாரம். அதைப்பீறிட்டுக்கொண்டு 'ஒழிக அடக்குமுறை' என்கிற ஆவேச முழக்கம், அங்கெழுந்தது. ஆனல் அந்த வாலிபனே பேசிக்கொண்டிருந்தான் — ஆத்திரத்தோடு. பலருக்கு ஆச்சரியம்!

"அவர் மகனு இப்படிப் பேசுகிறன்!"

"புலிக்குப்பிறந்தது பூனையாகவா ஆகும்?"

இதுபோலெல்லாம், பேசலாயினர் தலைவர்கள்.

அத்தகைய ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும், அந்தவாலிபனது பேச்சு, அவர்கள் மத்தியிலே எழுப்பற்று.

அவன்பேச்சைக்கேட்டோருக்கு மட்டுமல்ல; அவனுக்கே ஆச்சர்யமாயிருந்தது, 'நாமா பேசினேம்' என்று.

ஏனெனில் அவன்பொதுமேடையிலே பேசியது அதுதான் முதல் தடவை.

சர்க்கார் அவசரச் சட்டத்தை எடுத்து வீசியிருந்தது. பத்திரிகைகளின் எழுத்துரிமையைப் பறிக்கும் அந்தச் சட்டத்தைக் கண்டதும் பலர் குமுறினர். 'ஏனிந்த அடக்குமுறை?' என்று கேட்டனர். சர்க்காரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டிக்கவேண்டும் எனத் துடித்தனர்.

1915—1951

அதன்காரணமாக ஏற்பாடு செய்யப்பட்ட கண்டனக் கூட்டத்தில்தான், முதன் முதலில் அந்த வாலிபன், அறிமுகமானன்.

* * *

அவசரச் சட்டமா?

எழுத்துரிமையைப் பறிக்கவா?

எங்கே நடந்தது கண்டனக் கூட்டம்?

யார் அந்த புதுப் பிரசங்கி?

நம் இயக்கத்திலா?

கேட்கத் தோன்றும் நாளொரு உத்திரவும், பொழுதொரு அடக்குமுறையாக சர்க்காரிடமிருந்து பெறும் கட்சியினராக நாம் இருப்பதால்.

மேற்படி கண்டனக் கூட்டத்திலே, நாட்டுக்கு அறிமுகமான அந்த வாலிபன், நமது கழக ஆசாமியல்ல. சம்பவமும் இப்போது நடந்ததல்ல.

சர்க்காரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்துப் பேசிய அந்த வாலிபன், இன்று ஆளும் பொறுப்பிலிருக்கிறர். எந்த நாடு சிறைச்சாலையாக இருக்கிறது என்று கர்ஜித்தாரோ அந்த நாட்டின் முடிசூடா மன்னராக இருக்கிறர். அகில உலகும் இன்று அந்த வாலிபனைப் போற்றுகிறது. மேற்படி சம்பவம் பற்றி, இன்று ஆளும் தலைவராக இருக்கும் அவரே கூறுகிறர், 'தனது சுயசரிதை'யில்;-

"முதன் முதலாகப் பொது மேடையில் பேசுமாறு தூண்டப்பட்ட இடம், அலகாபாத். 1915ஆம் ஆண்டாயிருக்குமென்று நம்புகிறேன். தேதியும் நிகழ்ச்சியும் சரிவரக் கவனத்திலில்லை. ஆனல் சம்பவம்மட்டும் நினைவிலிருக்கிறது. நான் பேசிய முதல் கூட்டம் ஒரு கண்டனக்கூட்டம். வெள்ளை சர்க்கார் பத்திரிகைகளை அடக்கும் நோக்குடன் ஒரு புது அவசர சட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருந்தனர். நான் அதைக் கண்டித்துப் பேசினேன். கூட்டம் முடிந்ததும் டாக்டர் தேஜ்பகதூர் சாப்ரு என்னைக் கட்டித் தழுவினர். மேடையிலேயே என்னை அன்போடு அணைத்துக்கொண்டார்"

மகிழ்வோடு இந்தச் சம்பவத்

தைச் சித்தரித்திருக்கிறார், இந்தியாவின் பிரதமரான பண்டித நேரு.

முதன் முதலில் பொதுமேடையில் அறிமுகமானதே, எழுத்துரிமையைக் காப்பதற்குத்தான்.

அவரை அரசியல் உலகுக்கு அறிமுகம் செய்து வைத்ததே, அப்போது ஆண்ட ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எழுத்துரிமைமீது வீசிய அடக்குமுறைதான்.

அடக்குமுறை கண்டு பொறுக்காது அரசியல் மேடை ஏறினார், நேரு.

இது **1915**-ல்.

இப்போது, அவரே சட்டம் கொண்டு வருகிறார், பத்திரிகை யுரிமையைப் பறிக்கும் வகையில்!

இது, **1951**-ல்.

* * *

இந்த நிகழ்ச்சியை 1—7—51 அன்று வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற பேச்சுரிமை, எழுத்துரிமை மாநாட்டில், தி. மு. க. பொதுச்செயலாளர் எடுத்துச் சொல்லியபோது, கூடிக் கிடந்தோர் திகைத்தனர், 'அப்படியா?' என்று கேட்பதுபோல.

1915—1951; இந்த இரண்டு ஆண்டுகளுக்கிடையேயும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஒரு சுதந்திர வீரனை எத்தகையஏகாதிபத்தியவெறிக்குள் தள்ளிவிட்டது என்று பரிதாபப் பட்டனர்.

நேரு—எத்தகைய மாவீரர்! மக்களுடைய உரிமைகள் குறித்து அவைகளைக் காப்பதற்காக "உயிர் போயினும் தயங்கேன்" என்று வீராவேச மெழுப்பியவரன்றோ அவர்! அத்தகைய சுதந்திர ஜோதி, இன்று, இப்படியா நடப்பது—என்னே காலத்தின் கோலம்! என்ற எண்ணமே எல்லோரிடையிலும் எழும்பிற்று.

உண்மையில், இந்த நினைவு, நம்மைமட்டுமல்ல, எல்லோரது இதயங்களையும் கலங்கவைக்கவே செய்யும்.

மக்களுடைய அடிப்படை உரிமைகள்பற்றிப் போராடிய ஒருவரே இப்போது அதே உரிமைகளை ஒழிப்பது என்றால்!

* * *

காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி பீடம் ஏறியது முதல், மனிதருடைய பேசும் உரிமையும் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல.

பத்திரிகைகளுக்கு ஜாமீன், நாடகங்களுக்குத் தடை, நூல்கள் பறிமுதல், கூட்டங்களுக்கு 144, என்று ஆளவந்தார் வீசும் அடக்குமுறை அம்புகள், ஏராளம்.

மனிதனின் அடிப்படை உரிமைகள் இவை. ஆனால் இந்த சுதந்திர சர்க்காரில், இவைகள் செல்லாக் காசாகிக் கொண்டுள்ளன.

இத்தீமையை எப்படி நாம் சகித்துக் கிடக்க முடியும். இருக்கும் அடக்குமுறை போதாதென்று, இப்போது புதுச் சட்டம் ஒன்றையும் இந்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இது, மேலும் பத்திரிகைகளுடைய சுதந்திரத்தையும் தன் மதிப்பையும் பறிப்பதாகும்.

இந்தச் சட்டத் திருத்தம் கண்டு அகில இந்திய பத்திரிகையாளர் சம்மேளனம் என்கிற தேசிய சம்மேளனமே தனது ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறது.

அதோடு கண்டன தினம் நடத்துவதென்றும் தீர்மானித்திருக்கிறது.

மேற்படி சம்மேளனம் பிற்போக்குகளின் கூடம் என்பதும், நமக்குத் தெரியும்.

எனினும், ஆளவந்தாரின் அடக்குமுறை பற்றி உள்ளுணர்ச்சியோடு, இப்போது தனது கண்டனக் குரலை காட்டுவதென முடிவு செய்திருக்கிறது.

இந்த சம்மேளனம், ஆளவந்தாரின் சலுகைப் பொம்மை.

ஆனால், நாமோ, காங்கிரஸ் ஆளவந்தாரால் தினசரி தொல்லைக்கு ஆட்பட்டுத் தவிக்கும் கூட்டம்.

எனவே, நமது கண்டனத்தையும் ஆளவந்தாரின் அட்டகாசப் போக்கையும் எடுத்துக் காட்ட வேண்டும். இது மிக மிக முக்கியம்.

இதுபற்றி தீவிரமாக ஆலோசனை செய்த பிறகு திருப்பத்தூர் மாநாட்டிலே பின்கண்ட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறார்கள் – பெருமிதத்தோடு.

"இந்திய அரசியல் சட்டத்திலே அளிக்கப்பட்டிருந்த சாதாரண எழுத்துரிமையையும் பறிக்கும் வகையில் டில்லி சர்க்கார் அச் சட்டத்தைத் திருத்தியிருக்கும் கொடுமையை இம் மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் சர்க்காரின் இச் செய்கையை எதிர்க்கும் வகையில் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தில்நமதுஇயக்க தின வார இதழ்களும் தமது ஒரு வெளியீட்டை நிறுத்துமாறு இம் மாநாடு வேண்டுகிறது."

வாழப்பிறந்த மனிதன் சுதந்திரத்தோடு உலவ வேண்டுமானால், அவன் வாழும் சமூகத்தில் நீதி வேண்டும்., அந்நீதி நிலைத்திருக்க வழி வேண்டும்.

சமூகத்தில் அநீதி மலிந்து, கொடுமை மிகுந்துவிட்டால், அதில் மனிதன் சுதந்திரத்தைத் தேடினால் கிடைக்குமா? சுதந்திரத்தை நாடியோடினால் முடியுமா?

* * *

சமூக நீதி தழைக்க, ஜீவாதார

திருப்பூரில்

வகுப்புரிமை மாநாடு

24—6—51 ஞாயிறு அன்று திருப்பூர், யூனிவர்சல் தியேட்டரில் அறிஞர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., தலைமையில், மாணவர் வகுப்புரிமை மாநாடு நடந்தது.

தோழர் முத்துரத்தினம் எல்லோரையும் வரவேற்றார். சென்னைத் தோழியர் பூங்கோதை மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

தோழர்கள் எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம் பழநிச்சாமி, அ. ச. இளங்கோ, சிந்தனைச் செல்வன், கோவை செழியன் ஆகியோர், தலைவரை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசிய பிறகு, தலைவர் நீண்டதொரு அரிய உரையாற்றினார்.

பிறகு, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, 'போர்வாள்' மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), தோழியர்கள் அருண்மொழி, இளநங்கை, திருமகள் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

உரிமை எருக்கள் அவசியம்! மிக மிகத் தேவை!

இந்த உண்மையை உணர்ந்தால் தான் நீதி நிலைக்கும், நீடிக்கும், சமூகத்திலே!

சமூக நீதி, சரியாக, நெறியாக நிலவ, எழுத்துரிமை தேவை, பேச்சுரிமை வேண்டும்.

சமூக நீதி உயர்ந்த மாடி—எழுத்துரிமை, பேச்சுரிமை, மாடிக்குச் செல்லக் கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகள்.

படிக்கட்டுகளின்றி, மாடி செல்ல முடியாது—பறந்து செல்ல நமக்கு இறக்கைகளும் இல்லை!

சமூக நீதி, நடந்து செல்ல, இரண்டு கால்கள், அவ்வுரிமைகள்!

நினைப்பதை எழுத, நெஞ்சில் பட்டதை எடுத்துக் கூற முடியவில்லையென்றால், சமூகம் எப்படி சரியான பூமியாகும் — சருக்கிடச் செய்யும் வழுக்குப் பாறையாகத் தானே முடியும்!

சமூகம், மணற் குவியல் — ஒரு பிடி அள்ளுவதால், சரிவது ஏராளம். அப்படித்தான் நீதியொன்று நசித்தால், நாசம் நிரந்தரமாகிவிடுகிறது, சமூகத்திலே.

அந்நீதியும், எழுத்துரிமையால் வலுப்பெறுகிறது, பேச்சுரிமையால் விளக்கமடைகிறது!

இதனால், திருப்பத்தூரில் சென்ற 30—6—51, 1—7—51 ஆகிய இருநாட்களிலும், சமூக நீதி, எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாடுகள் நடத்தினர் நம் திராவிட முன்னேற்றக் கழக வீரர்கள்.

இரண்டு நாட்களிலும், கண்கள் ஓடிய பக்கங்களிலெல்லாம், கொள்கை வெறியேறிய காளைகள்—திரும்பிடும் இடம் எங்கும் திராவிடத்தின் தீட்டிய வாட்கள்—தீட்டிய ஈட்டிகள் — ஆம், எங்கும் திராவிடம் பெற்ற தீரர்கள் — எதிரிகள் திடுக்கிடும் வகையில் பணி புரியும் சிங்க இளைஞர்கள்!

திராவிடத் தீரர்கள் மட்டுமா, அவர்களோடு போட்டி போடும் வகையில், தாய்மார்கள்! பந்தலில் பாதிக்குமேல் அவர்கள்! அந்தக் காட்சியே, அச்சமும், மடமையும் இல்லாத பெண்கள் — தமிழ் நாட்டின் கண்கள் என்று நம்மை பாட வைத்துவிட்டது!

முதல் நாள் தோழர், க. அன்பழகன் எம். ஏ., தலைமையில், சமூக நீதி கோரினர் சென்னைத் தோழர் வி. முனுசாமி, இம் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

இரண்டாம் நாள், எழுத்துரிமை, பேச்சுரிமையை பறித்திடும் போக்கிற்கு இறுதிச் சடங்கு நடத்திட மாநாடு கூடினர். தோழர் சி. வி. எம். அண்ணாமலை துவக்கினார். தோழர் ஈ. வே. கி. சம்பத் தலைமை ஏற்றார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வில்லு பாட்டு, நாகூர் அனீபா, சென்னை செல்லமுத்து, கஸ்தூரி பாய் இன்னிசையும் கேட்டார்கள்.

திருப்பத்தூரில் இம்மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தினர் நம் இயக்கக் காளைகள்—அவர்கள் எல்லோரும் நம் பாராட்டுதலுக்குரியவர்கள். வரவேற்புக் குழுவில் பங்கு பெற்று பணியாற்றியோர் அனைவருமே நம் வாழ்த்து விழிகளுக்கு முன்னால் அணி வகுக்கின்றனர். எனினும், தோழர் வி. பி. இராசாபாதரின் சலியா உழைப்பை நாம் மறக்க முடியாது. அவர் வெற்றிக்கு வித்து! அவரோடு, இரவு, பகல் என்று பாராமல், தொண்டாற்றிய இயக்கத்தின் 'நாடி நரம்புகள்' ஏராளம். வடாற்காடு மாவட்டப் பொதுச் செயலாளர் போளூர் சுப்பிரமணியம், நோய்ப் படுக்கையில் கிடக்கும் எம். பி. வடிவேல், ஆகியோரை நம் பாராட்டுதல்கள் தழுவட்டும்...வாழ்த்துகள் அணைக்கட்டும்!

* * *

குருடனுக்கு கோல் — வாழ்ந்து கெட்டோருக்கு சமூகநீதி!

ஆனால், அநீதிக்கோல் கொண்டு நடந்து செல்ல, பாதை செப்பனிட்டதாக இருக்கவேண்டும்.

எழுதாதே! பேசாதே! எண்ணாதே! நடிக்காதே! பாடாதே! என்று கூறிவிட்டு, சமூகநீதி உண்டு என்றால் நகைப்பர்.

இதை, நேரு அறிய மாட்டாரா? அறிவார். அறிந்தும் இந்த அலங்கோலம் ஏன்?

1915 நேரு எங்கே? 1951 நேரு ஏன் இப்படி மாறினர்?

சமூக நீதியை சழக்கர்கள் சாய்த்து விட்டாலும், சரியாக்க வேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்த நேரு, எழுத்துரிமையை பறித்திட முனைந்து விட்டார். இது கொடுமை—தாங்காது திராவிடம்! எதிர்க்கும்—தளராது திராவிடம்!

முதன் முதல் நேரு பேசிய கூட்டமே, பத்திரிக்கை சுதந்திரத்தை, பிரிட்டிஷார் பறித்திட்டனர் என்பதை மக்களுக்குக் காட்டி, கண்டனக் குரல் எழுப்பியதுதான்! ஆனால் இன்று அவர் நம்மாள்வார். இருந்தும் எழுத்துரிமையைப் பறித்து விட்டார்.

நேரு மாறி விட்டார்—மக்களை தங்களை மதியாதோரை மாற்றிவிடவும் மனந்தேறிவிட்டனர்!

1915-ல் மக்களில் ஒருவர்—அதுவும், குறிப்பிடத்தக்கவர், நேரு! ஆனால் 1951-ல், மக்களை மதியாத மமதையாளர்களின் தலைவராகி விட்டார்!

முப்பத்தாறு ஆண்டுகளில் இந்தப் புயல்! அரசியல் கொந்தளிப்பு!

மனிதனின் ஜீவாதார உரிமைகளை என்றும் எவரும் பறிக்கக் கூடாது—பறித்திட முடியாது!

6(-ம் பக்கம் பார்க்க)

"போராட்டம்"

வாரப் பத்திரிகைத் துவக்க விழா

15—7—51 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்குத் திருவத்திபுரத்தில் "போராட்டத்"தின் துவக்கு விழாவை நடாத்த சி. என். **அண்ணாதுரை** அவர்கள் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

அன்பர்கள் அனைவரும் வருக.

மா. நா. இராசமாணிக்கம்.

★ வீண் புலம்பல் ★

—xxx—

நல்லமுத்து செட்டியார், ஊராரால் 'ஓகோ' என்று புகழப்பட்டவர். சாதாரண 'டீ' கடைதான், ஆரம்பத்தில் அவர் வைத்தது. அதுவும், கள்ளுக் கடையிருந்த காலத்தில், கள்ளின் தீமையையொழித்து மக்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்கிற ஆசையோடுதான் ஆரம்பித்தார். கடையைத் துவக்கிய காலத்தில், போதையேறியோரின் பொல்லாப்பும், குடிக்கு அடிமையானோரின் கொக்கரிப்பும், அவரைப் பல வகைகளில் பாதிக்கச் செய்ததுண்டு. திடீரென கற்கள் சரமாரியாக விழும், அவர் மீது!

நாலைந்து பேர் கூடிக்கொண்டு அவர் கடைமீது பாய்ந்ததுண்டு-பல சமயங்களில்! ஆனாலும் அவர் அதைப் பற்றி அஞ்சவில்லை. ஊரார் கூடச் சொல்வர், "அவருக்கென்னப்பா, ஆஸ்தி பூஸ்திக்குக் குறைச்சலா? ஏன், டீக்குவளையும், கிளாசு மாங்க்கணும்......" என்றெல்லாம். அவர் இந்த ஏளனத்தையெல்லாம், வாழ்த்துக்கள் என்றே எண்ணினார். நாட்கள் ஓடின. 'டீயின் புகழ் பரவிற்று. சாலையிலே களைத்துப் போன வண்டிக்காரர்கள், காருக்குக் காசில்லாததால் கால் நடையாகச் செல்வோர், இதுபோலப் பலப் பலருக்கு 'டீ' தேனமிர்தம் போலிருந்தது! புகழ் பரவவே, வியாபாரம் வளர்ந்தது. நல்லமுத்து செட்டியார் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே, காசு வந்தது.

இந்த நேரத்தில், மதுவிலக்கும் அமுலாக்கப்பட்டது.

கள் அரக்கன் ஒழிந்தான்! இது போலக் குதூகலப் பட்டனர் ஊரார். புது வாழ்வு வந்தது!-இப்படியெல்லாம் பாடினர் மக்கள். மளிகைக் கடை, எண்ணெய்க்கடை, துணிக்கடை, நெல் மண்டிக்காரரெல்லாம் 'மது ஒழிந்த நாளை' பிரமாதமாகக் கொண்டாடினர்—தோரணங்கள் கட்டியும், சுண்டல் வழங்கியும்.

"செட்டியார்வாள்! உங்க ஆசை நிறைவேறிவிட்டது. மது, ஒழிந்துவிட்டது. உங்கசேவை, ரொம்ப, சிலாக்யமாயிருந்தது"

"கள்ளுக்கடையை ஒழிப்பதில் கவலைகொண்டிருந்தார், செட்டியார். வேலைகளையும் விட்டுட்டு, போட்டிக்கு 'டீ' கடை வைத்து, இலட்சியத்தின் மேல தனக்குள்ள சிரத்தையைக் காட்டினார். அவரது தியாக உள்ளம் போற்ற வேண்டியது. புகழ வேண்டியது"

ஊரிலே பலர் இது போலப் பேசினர். 'மது ஒழிப்பு நாள்' செட்டியாரது தலைமையில் தான் கொண்டாடப்படவேண்டும் என்றனர். பெரிய மாலையாகக் கட்டி போட்டால் தான் நல்லது என்றும் பேசிக்கொண்டனர்.

ஆனால், நமதுசெட்டியார்மட்டும், பேசாது இருந்தார். மது ஒழிந்ததால் ஏற்பட வேண்டிய மகிழ்வோ, ஆனந்தமோ எதுவும் தென்படவில்லை அவர் முகத்தில்.

மதுவிலக்கு விழாவும் கொண்டாடப்பட்டது. நாட்களும் நகர்ந்தன. ஆனால் மதுவை ஒழிப்பதற்காக வைக்கப் பட்ட 'டீ' கடை மட்டும் அப்படியே இருந்தது.

"கள்ளை ஒழிக்கத்தானே 'டீ' கடை வைத்தார் — செட்டியார். மது விலக்குத்தான் வந்துவிட்டதே பிறகேன் கடை?" இதுபோலக் கேட்கவில்லை, ஊரார். ஆனால் ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது பேசிக்கொண்டனர்! செட்டியார் காதிலும், விழாமலில்லை, எனினும் இதெல்லாம்தெரியாதவர் போலவே இருந்தார். கடை வைக்கும்போது உத்தம எண்ணத்தோடுதான் ஆரம்பித்தார். ஆனால் காசு குவிவதைக் கண்டதும் உத்தம எண்ணம் செத்துக் கொண்டேயிருந்தது அவர் இதயத்தில். 'டீ வியாபாரத்தால் பணம் வருகிறது, ஏன், கடையை மூட வேண்டும்' என்று எண்ணினார். 'கையிலிருக்கும் பணத்தில் மேலும் சிறிது முதல் எடுத்துப்போட்டுகடையைப் பெரிதாக்கினால் இன்னும் லாபம் வருமே!'—இப்படி ஆசை வளர்ந்தது. 'டீ' கடை, 'ஓட்டல்' ஆயிற்று. புதுமேஜைகள்! நாற்காலிகள்! போர்டு! பையன்கள்! கடை பெரிதாயிற்று. எடுபிடிகளும், வருவோர் போவோரும் அதிகமாயினர். ஆனால் வியாபாரம் வளர வளர, செட்டியாரின் மனம், மாசுபடிந்த குகையாயிற்று.

முன்பெல்லாம் ஊராரிடம் அன்போடு பேசுவார்.

இப்போதோ, 'அன்போடு பேசுவது தன் அந்தஸ்துக்கு அழகல்ல' என்று கருதினார்.

கள்ளின் தீமை — உலகின் வளர்ச்சி—நாமும் மனிதராக வாழ வேண்டும்—அடிமை விலங்கு ஒடிய வேண்டும்.

—இது, முன்பு, அவரது பிரசங்கங்கள்.

'வட்டிக்கு வட்டிதா!' 'நிலம் எங்கே வாங்கலாம்?' 'மாடிவீடு கட்ட மனைகிடைக்குமா?' — இந்த விசாரணைகள் இப்போது.

இந்த 'சுயநலம்' செட்டியாரிடம் அதிகமாவதைக்கண்டான், சின்னத்தம்பி. சகிக்கமுடியவில்லை, அவனால்!

'டீ' கடை வைத்ததிலிருந்து நல்லமுத்தோடு, நண்பனுக்கு நண்பனாய், தம்பிக்குத் தம்பியாய் இருந்து வந்தவன், சின்னத்தம்பி.

அவனும் செட்டியாரைப்போல, வாழும் வசதிபடைத்தவன்தான். ஆனாலும் அவரது உத்தம குணம் கண்டு தானும் ஊராருக்கு உழைக்க வேண்டும் என்ற ஆசையால் அவரோடு இருந்து வந்தான்.

அத்தகைய நல்லெண்ணம்கொண்டவனால், எப்படிச் சகிக்க முடியும் செட்டியாரின் திமிரை?

'காப்பி' என்று கேட்டால், அதில் தண்ணீரைக் கலந்து தருவதும், 'அசல் நெய்யினால்' தயாரானது' என்று சொல்லி, 'தேங்காயெண்ணெய் பட்சணங்களை விற்பதும், 'எட்டு அவுன்சு அரிசி' என்று கூறி 'ஆறு அவுன்சு அரிசிச்சோறு' போட்டுவிட்டு மீதியை கள்ள மார்க்கெட்டில் விற்பதையும் காணக்காண, சின்னத்தம்பியின் மனம் கொதித்தது. ஜாடைமாடையாகச் சொல்லிப் பார்த்தான். செட்டியாரோ, பயப்படவில்லை. அதற்குப் பதிலாக பயமுறுத்தினார். பார்த்தான் பலநாள். செட்டியாரின் சுயரூபம் தெரிந்தது. என்ன செய்ய

(9-ம் பக்கம் பார்க்க)

மரங்கள்!

வெட்கந் துளியுமின்றி, இந்த ஆண்டும், வனமகோற்சவம் கொண்டாடியிருக்கிறார்கள்!

சென்னை ராஜ்யம் முழுவதிலும் 5 இலட்சம் மரங்கள் உற்பத்தியாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு நடத்திய வனமகோற்சவம் என்னவாயிற்று? நினைத்துப் பார்க்கவேண்டாமா?

ஐந்தில் ஒரு பாகமே உயிர் பெற்றது! மரமந்திரி முன்ஷியார் அளித்த கணக்கு இது!

இந்த ஆண்டு எந்தத் தைரியத்தில் இந்த உற்சவத்தை நடத்தினார்கள் தெரியவில்லை.

பொது மக்கள் வரிப்பணத்தை எப்படிப் பாழ் பண்ணினாலும், கேட்கமாட்டார்கள் என்ற தைரியம் தவிர வேறென்னவாக இருக்க முடியும்?

சர்க்கார் சாலையோரங்களில் மரம் வைப்பது, இவர்கள் கண்டுபிடித்துவிட்ட புதிய விஷயமல்ல— அசோகர் என்ன செய்தார், அக்பர் என்ன நன்மைகள் செய்தார் என்று கேட்டால் உடனே மாணவன், தயங்காமல், பெரிய பாதைகள் போட்டார், சாலையோரங்களில் மரங்களை வளர்த்தார்........என்று ஆரம்பித்து விடுவான்.

சாலையிலே இரண்டு மரம், சர்க்கார் வைத்த மரம் என்று இன்னமும் பாடுகிறார்கள், கிராமப் புறங்களில்!

ஆகவே, ஆளவந்தார் மரம் வளர்ப்பது புதிதல்ல — ஆனால் அதற்கு உற்சவம் கொண்டாடுவது புதிது மட்டுமல்ல, பித்தம் நிறைந்த செயல்!

அதற்கு மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குவதை யாரும் அனுமதிக்க முடியாது— கண்டனத்திற்குரியது.

மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய்விடுவான்? என்று சொல்லி, சொல்லி சோம்பேறிகள் வளர்ந்துள்ள நாட்டில் வனமகோற்சவம் நடத்துகிறார்கள்!

அதனால் தான் ஐந்தில் ஒன்று பிழைத்தது போலும்— முதல் வருடக் கணக்கைப்பார்த்தும் வீண் முயற்சியிலே ஈடுபடலாமா? ஈடுபட்டால், யார் மரம் என்பதே புரியாமல் போய்விடுகிறதல்லவா?

* * *

எதிர்காலத்திலும் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள நிறைய மரங்களை நடுங்கள்.

மரமந்திரி, முன்ஷி, இந்த போதனையை ரேடியோமூலம், அனுப்பிவிட்டார் நாட்டு மக்களுக்கு!

இந்த ஆண்டு, இந்தியா முழுவதிலும் மூன்றுகோடி நடப்போகிறார்களாம்—என்ன விந்தை! எத்துணை வேதனை!

சென்ற ஆண்டு கற்பித்த பாடத்தை மறந்துவிட்டு, இப்படி ஆடிக்குதிக்கிறாரே, அமைச்சர் — அதுவும் நாட்டு மக்களின் மனமும் கருத்தும் மரத்துவிட்டது என்று மனப்பால் குடித்தபடி! நாடு முழுவதும் வனமகோற்சவம் கொண்டாடியதால் உற்சாகமும், உணர்ச்சியும் கரைபுரண்டோடிற்றாமே!

மந்திரி கூறுகிறார். அவர் மனிதரானால், மனித இதயங்களின் பாஷையைப்புரிந்துகொள்வார் — ஏனோ, அவர் மக்கள் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்.

வனமகோற்சவம், வாலிபர்களின் திருவிழா! எதிர்காலத்தின் பெருவிழா! நம்பிக்கை உற்சவம்!

பஞ்சம் பரவியிருக்கிற இந்த நேரத்தில், ஆள்வோர் சிந்தனையிலும் அது தாண்டவமாடுவதைப் பார்க்க நாம் என்ன செய்வதென்று தெரியாமல் மரமாய் நிற்கவேண்டித் தானிருக்கிறது!

ஒரு வேளை, இனி மரத்திற்கு மரம், அவர் ஆரம்பித்துள்ள பூமிசேனை வீரர்களில் ஒருவரை நிறுத்துவாரோ, என்னவோ, அறியோம்!

மரத்திற்குப் பக்கத்தில், மனித மரம்! செய்தால் யார் தடுக்கமுடியும்? அவர் மந்திரி—அதுவும் அவர் 'மகரிஷி மாடல்,' எதிலும்!

அவர் மரமாவதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. மக்களையும் மரங்களாக்கும் மந்திரியாக இருக்கிறாரே, என்பதனால்தான் நாம் கவலைப்படுகிறோம்!

✲

8-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டாட்சியிடம் அதிகாரம் இருந்தால் என்ன!

கூறுவதையும் கூறிவிட்டு, குழைகிறார், நெளிகிறார், குல்லுகபட்டர் —அதுதான் சிரிப்பாய் இருக்கிறது!

தவறாக நினைக்கக் கூடாதாம் தவறாக நினைக்கவே இல்லை—அவரை சரியான சாணக்கியர் என்றே நினைக்கிறோம்—போதுமா?

ஆனால் ஆச்சாரியாரைச் சரியாகத் தெரிந்துகொண்டதால்தான் இதைக் கூற நினைக்கிறோம்.

வேலும், அம்பும், இன்ன இடம் என்று குறிப்பிட முடியாமல் பாய்ந்து துளைத்துள்ள வேழம், திராவிட சமூகம். அதில் மேலும் கோல்கொண்டு குத்தி, குறும்பு செய்ய வேண்டாம், புல்லால் அணை புரக்கமுடியும் என்று பவனி வந்த பரம்பரையின் இன்றைய தலைவர் — ஆச்சாரியார் என்று கூறுகிறோம்—அவர் நன்மைக்காக!

✲

படியுங்கள்!

விலை ரூபாய் ஒன்று

விவரங்களுக்கு :—

கலைப்பண்ணை,

சூளை, சென்னை, 7.

திராவிடநாடு

காஞ்சி] 8—7—51 [ஞாயிறு

எச்சரிக்கை

★

காங்கிரஸ் எதேச்சாதிகாரம், தன் கொடுமைத் தாண்டவத்தை தொடர்ந்து நடத்துகிறது. ஆளும் வகை தெரியாது மக்களை அல்லலுக்கு ஆட்படுத்துவது மட்டுமின்றி மக்களுடைய அடிப்படை உரிமைகளையும் பறித்துக் கொண்டே உள்ளது. பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை, ஆகியவை மக்களின் அடிப்படை உரிமைகள். ஆனால் இவைகள் இன்று, அலங்கோலப் படுத்தப்படுகின்றன — காங்கிரஸ் சர்க்காரால். இந்த அநாகரீகப் போக்கை அனுமதிப்பது, ஆகாது!

மக்களுரிமை பற்றி வீர முழக்கமிட்டு விருதுபெற்ற சுயராஜ்ய வீரர்கள் ஆட்சியில் உரிமைகள் பறிக்கப்படுவது — வெட்கப்படக் கூடிய செயலாகும்.

வேல்பட்ட புலி போலக்கிடக்கும் மக்கள் மீது மீண்டும் அம்பை வீசுவது போல, பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்றையும் கொண்டு வந்திருக்கிறார்கள்— டில்லி சர்க்கார்.

இது மிக மிகக் கேவலம் நிரம்பிய செயல். கண்டனத்துக்குரிய காட்சி.

இந்த அடக்கும்முறைச் சட்டத்தை ஆட்சியாளர் வாபஸ் பெற வேண்டும். அதோடு எழுத்துரிமை, நாடக உரிமை, பேச்சுரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில் எதேச்சாதிகாரத்துடன் நடப்பதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த நம் கண்டனத்தை, ஆளும் பொறுப் பேற்றோருக்குத் தெரிவிக்கும் அறிகுறியாக நமது, அடுத்த வார இதழ் வெளிவராது.

ஏகாதிபத்திய வெறியர்களாகாதீர் என்ற அன்புரையோடு, நமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெறி அடங்கும் வரை, நாம் தூக்கும் உரிமைக் கொடி, இறங்காது என்பதையும், பாசிசப் பாதையில் நடப்போர் உணர வேண்டும்.

அடக்குமுறையால் எந்த ஆட்சியும் நீடிக்க முடியாது. மக்களுரிமைகளைப் பறிக்கும் எந்தசர்க்காரும், நீண்ட நாள் வாழ்ந்ததில்லை.

இதை, காங்கிரஸ் சர்க்கார் கருத்தில் கொள்ளட்டும். மனித உரிமைகளை மதித்து நடக்கட்டும். வீண் பழிக்கும், விபரீத அழிவுக்கும் ஆளாகாது நடந்து கொள்ளட்டும்.

ஒழிக அடக்குமுறை!

அடுத்த இதழ்

அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் காங்கிரஸ் ஆட்சியாளரின் அடக்குமுறைப் போக்கைக் கண்டிக்கும் முகத்தான், 15—7—51-ல் நமது 'திராவிட நாடு' வெளிவராது என்பதை ஏஜண்டுகளுக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—நிர்வாகி.

3-ம் பக்கத் தொடர்ச்சி

மலருக்கு மணம், நீருக்கு தண்மை, இலைக்கு பசுமை—இவை இயற்கை. இதுபோல மனிதனுக்கு எண்ண, எழுத, பேச உரிமைகள் இயற்கையானவை!

இயற்கை விதியை முறித்திட்ட எந்த எதேச்சாதிகாரியும் நீண்ட நாள் வாழ்ந்ததில்லை. சரித்திரம் அத்தகையோரின் சாவுக் கதைகளைத்தான் கூறுகிறதே தவிர, மனித உரிமைகளை மதியாத மமதையாளரின் புகழ் கீதம் பாடவில்லை.

நேரு மறந்து விட்டார். நிலைமை மாற்றம், அவரை இந்தப் பாதைக்கு இழுத்துவந்து விட்டது! ஆனால், அவருக்கு இது பெரிய ஏமாற்றத்தைத்தான் தரும்.

அடிப்படை உரிமைகளைத் தட்டிப் பறிப்போர், நேருவானாலென்ன மேருமலைபோல் உயர்ந்தவரானாலென்ன—எதிர்ப்பர் மக்கள்.

திருப்பத்தூர் மாநாடு, இந்த அடக்கு முறை ஆட்சிக்கு அறைகூவல்-எழுத்துரிமையை அழித்திடுவோருக்கு சவால்-பேச்சுரிமைபறித்திடுவோருக்கு எச்சரிக்கை!

கண்டனத்தைத் தெரிவிக்க, ஒரு வெளியீட்டை நிறுத்துகின்றன இயக்க தினசரி, வார, மாத இதழ்கள். எதிர்ப்பை, இதன் மூலம் எதிரொலிக்கச் செய்கின்றன.

கண்டனத்தோடுமட்டும் நிறுத்தவில்லை. கண்டிப்பான எச்சரிக்கையும் விட்டிருக்கிறது, திருப்பத்தூர் மாநாடு.

இது வரை, நம் இயக்க நாடகங்கள் பலவற்றைத் தடை செய்து விட்டது, இந்தக் காங்கிரஸ் சர்க்கார்.

இந்தஅடக்குமுறைப்பாணங்களை அவர்கள் வாபஸ் பெறவேண்டும். இல்லாவிட்டால், போர் துவங்கும் என்றே அறிவிக்கப்பட்டுவிட்டது,

சமுதாய இழிவுகளைப் போக்கி, அறிவு வளர்ச்சியை உண்டாக்கும் 'இரணியன்' 'போர்வாள்' 'தூக்கு மேடை' 'நல்லதீர்ப்பு' போன்ற நாடகங்களுக்குத் தடை விதித்துள்ள சென்னை சர்க்காரின் போக்கை கண்டிக்கிறது.

தடையை, 1951 அக்டோபருக்குள் நீக்கிவிடவேண்டும்.

நீக்காவிட்டால் தடையைமீறி, அந்நாடகங்களை நாடெங்கும் நடத்தி பேச்சுரிமை, எழுத்துரிமை காக்க எல்லாவகையான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

இப்படித் தீர்மானித்துள்ளனர்.

போர் முரசு கொட்டினர்! பொல்லாத பாதை போகும் ஆட்சியாளருக்கு, அவர்கள் போக்குத் தகாது எனச்சுட்டிக் காட்டினர்!

நேரு, இன்று எரிமலைமீது அமர்ந்திருக்கிறார்.

1915-ல் அவர் மக்கள் மனதை எரிமலையாக்கினார். அந்நிய ஏகாதிபத்தியத்தின்மீது ஆத்திரத்தீயை வளர்த்தார்.

ஆனால் இன்றோ, எதேச்சாதிகார எரிமலையின்மீது அமர்ந்துகொண்டு எக்காளமிடுகிறார். அது என்று வெடிக்குமோ தெரியாது!

1915ல் அவர் தந்தார் எச்சரிகை 1951ல், நாடு எச்சரிக்கிறது அவரை!

1915ல், பத்திரிக்கைச் சுதந்திரத்தை பறித்திட அந்நிய ஏகாதிபத்தியத்தின் மீது சீறினார். 1951ல், பத்திரிகைச் சுதந்திரத்தை பறித்து விட்டுச் சிரிக்கிறார்!

வேல் பாய்ந்த வேழம்

கல்வி நிர்வாகத்தை, அந்தந்தப் பகுதியை ஆள்வோர் பொறுப் பிலேயே விடவேண்டும். அவர்கள் மத்திய ஆட்சியின் ஏஜண்டுகள் அல்ல! மேலும், அந்தப் பகுதியிலுள்ளோருக்குத்தான், அதிக அதிகாரமும் இருக்கவேண்டும்—கல்வி விஷயங்களைப் பற்றி ஆராயவும், முடிவு செய்யவும் அவர்களுக்கு உரிமையும், அதிகாரமும் வேண்டும்.

* * *

அவர், இப்படிப் பேசியதைக் கேட்டதும், கேட்டவர் ஆச்சர்ய சிலைகளாகிவிட்டனர் — கேள்விப் பட்டவர் வியப்பால் வாயடைத்துப் போயினர்!

ஆட்சியாளர்கள் பலர் பயந்தனர்—சிலர் வியந்தனர் — இன்னுஞ்சிலர் சினந்தனர்.

ஆனால், அவர், எதையும் ஏறெடுத்துப் பார்க்காமல் கூறினார். அவர் என்ன எண்ணுவார், இவர் எப்படிக் கருதுவார் என்ற சிந்தனையே இன்றி!

மத்திய ஆட்சியின் பிடி எதிலும் கூடாது! உள்நாட்டு நிர்வாகிகளுக்கு அதிகாரம் வேண்டும்!

நகராட்சியைக் கவனிப்போருக்குத்தான், அங்குள்ள கல்வி வளர்ச்சியைப் பற்றிய கருத்துகள் புரிய முடியும்!

ஆகவே, மத்திய ஆட்சியின் 'கெடுபிடி' குறையவேண்டும்.

இப்படி அவர் கூறினார். அதுவும் ஆதாரத்தோடு, அழுத்தந் திருத்தமாக!

இதுபற்றி முடிவிற்கு வர ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக்கமிட்டியாரோ, மேற்கண்ட முடிவையே தந்துவிட்டனர். அந்த முடிவை எடுத்துச் சொல்லும் பொழுதுதான், செவியுள்ளோர் அனைவரும் ஆச்சர்யப்பட்டனர்.

ஸ்தலஸ்தாபன உரிமை முழக்கம், இன்று நேற்று ஏற்பட்டதல்ல—பல நாட்களாகவே உள்ளது. கல்வி விஷயத்தில் மட்டுமல்ல, எல்லா துறைகளிலும்!

பேசியது இங்கல்ல, பிரிட்டன் நகரில் அகில உலக நகராட்சி அதிகாரிகள் மாநாட்டில் — பேசியவர் ஹோவார்ட்ராபர்ட்ஸ்.

* * *

நகராட்சியிலே நிலையிடும், மத்திய ஆட்சியைத் தாக்கினார். அவர் இங்கிலாந்திலே இருக்கிற காரணத்தால்!

இந்தியாவிலிருந்தால், மாகாண உரிமைகளைப் பறிக்கும் டெல்லி ஆட்சியைத் தாக்குவார் சந்தேகமில்லாமல்!

அதுவும், கல்வித்துறையில் ஒரு பெரிய பூகம்பமே ஏற்பட்டுவிட்டது!

டெல்லியிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதால்தான், சமூகநீதி பற்றி, ஒரு சோகசித்திரம் வரைய வேண்டியதாகிவிட்டது!

மாகாணத்திடமே, முழு அதிகாரமும் இருந்திருந்தால் இந்தப் பொல்லாங்கு வந்திராது!

சமூகநீதியின் மீது சட்டபாணம் பாய்ந்தபொழுதே, சென்னை, அதற்கு எதிர் பாணம் போட்டிருக்க முடியும்.

மத்திய ஆட்சியிடம் அதிகாரம் இருக்கிற காரணத்தால்தான் அங்கு போய் வரவேண்டியதாகிவிட்டது!

ராபர்ட்ஸ் குரல் இங்கு எதிரொலிக்காத இடமில்லை! எந்த செய்தியிலும் அவரது குரலின் பிரதிபலிப்பு இருக்கிறது!

சமூகநீதி சாய்க்கப்பட்ட நேரத்தில், தாமே சலுகைகள் சில தர முடியும் என்ற நிலையிருந்தால் கதை வேறாக இருக்கும்.

ராபர்ட்ஸ் கேட்ட அதிகாரம் கொடுத்தாலும், சென்னை ஆளவந்தார் தொடைநடுங்கியாகவே நடந்து கொள்வார்கள்.

ஆம், அவர்கள் அளித்த திட்டம் அப்படியுள்ளது.

நாம் எதிர்பார்த்தது தங்கத் தாம்பாளம்—அவர்கள் அளித்துள்ளதோ, முலாம் பூசியது!

இதனை ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளோம்.

ராபர்ட்ஸ் விளக்கம், நமக்கெல்லாம் தெளிதேனாகிறது!— அவர்களுக்கோ, பாம்பின் விஷமாகப் படுகிறது!

அதனால் தான் கல்வித் துறையிலே, நம் மாகாணத்தைப் பற்றிய பிரச்சினைகளை அறிய முடியாதவர்களிடம் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, இவர்கள் விழிக்கிறார்கள். கிடைத்த உரிமைகளையும் சரியாகப் பயன்படுத்தாமல், இந்நாட்டின் பெருங்குடிகளுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்கள்!

* * *

வேல் பாய்ந்த வேழமாக இருக்கிறார்கள், மக்கள் இந்த நேரத்தில்!

வெந்த புண்—மக்கள் மனம், இன்று! அதில் வேலை நுழைக்கிறார், மத்திய சர்க்காரில் மந்திரியாக உள்ள ஆச்சாரியார்.

நொந்து கிடக்கும் உள்ளத்திலே, எரி நெருப்பைக் கொட்டுகிறார் அவர்.

அதனால், விபத்து ஏற்படும்—அதன் விளைவு யாரை பாதிக்கும் என்பதை அவர் அறிவார்!

ஆச்சாரியார், வந்தார், போனார் என்றே இருக்காது, அவர் வந்து போகிற சந்தர்ப்பங்களிலெல்லாம்!

ஏதாவது குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி இருந்தே தீரும்.

இப்பொழுது, குறும்புப் பேச்சால், ஒரு பெருஞ் சமுதாயத்தின் கோபத்தைக் கிளறுகிறார்.

தந்திர வார்த்தைகளால், தமது இனத்தில் ஒளிந்துகொண்டுள்ள எரிச்சலைக் காட்டுகிறார்.

கல்வித் துறையில் பின்னணியில் உள்ள வகுப்பாருக்குச் சில சலுகைகள் காட்டவேண்டியது தான்—என்று தொடங்குகிறார் ஆச்சாரியார், சென்னையில், முஸ்லீம் சங்கத்தின் சார்பில் நியூ காலேஜை திறந்து வைத்துப் பேசுகையில்!

அவர் கண்ணன் காட்டிய வழியில் நடப்பவர்-வியாசர் விருந்தளிப்பவர்—வேறெப்படிப் பேசுவார்?

தொடக்கம் இப்படி — பிறகு அவர் கொட்டியளந்திருப்பதைப்

பாருங்கள். கொதிக்கும் உங்கள் உள்ளம் — கொந்தளிக்கும் கடலாகும் உங்கள் இரத்தம்!

அவர்களுக்குச் சொந்த முயற்சி எடுத்துக் கொள்ளமுடியாதபடி அதிகமாகச் சலுகைகள் காட்டக்கூடாது.

இதனால்அவர்கள் தன்னம்பிக்கை இழந்துவிடுகிறார்கள்.

தாங்கள் சொந்த முயற்சியால் அவர்கள் முன்னுக்கு வரமுடியும் என்பதையே மறந்து விடுவார்கள்.

ஆகையால் : கொடுக்கப்படும் சலுகைகள், முன்னணி வகுப்பாரை உண்மையில் முன்னுக்கு கொண்டு வருவதாக இருக்கவேண்டும்.

ஆச்சாரியார் பரம்பரை, ஆட்சியாளர்களுக்குக் கூற நினைத்ததைக் கூறிவிட்டார்.

இப்பொழுது அளிக்கப்பட்டுள்ள சலுகை குறைவு—பின்னணி வகுப்பாருக்கு கொடுக்கப்பட்டுள்ள 25o/o யை உயர்த்தி 40o/o ஆவது ஆக்கவேண்டும் என்று பலர் கேட்கின்றனர். இந்த நேரத்தில் ஆச்சாரியார் தத்துவார்த்தம் பேசுகிறார்.

அவர் கூறுவதெல்லாம், படிக்கிற பொழுது கவனிக்க வேண்டிய விஷயங்கள். இங்கோ, பள்ளி வாயிலில் நுழைவதற்கே இத்தனைத் தடங்கல்கள். பின்னணி வகுப்பாருக்கு!

நுழைந்த பிறகு தான், தூங்கும் திறமையைத் தட்டியெழுப்பவேண்டும்—தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும் — சுய முயற்சியின் பெருமையை விளக்கவேண்டும்.

உள்ளே நுழையவே முடியவில்லை— அந்தக் கொடுமையைக் களைந்திடவே வகுப்புவாரி உரிமை முறை இருந்தது. அதனை அழித்தனர் அவர் பரம்பரையினர்!

அதற்குப்பதில் திட்டம் வந்துள்ளது—அதுபற்றி மக்கள் நினைத்து, நினைப்பை நெருப்புக் குன்றாக்கியிருக்கிற நேரத்தில் அவர் பேசுகிறார்!

கலர்க்கண்ணாடிக்காரரின் காலட்சேபம் நமக்குத் தெரியாததுமல்ல— புரியாததுமல்ல! போதனை வேதனை தருவதாக இருக்கிறது.

ஆனால். கல்லூரிகளில் சேர்ந்த பிறகல்லவா, அவர் உபதேசம்பலன் தரும். இல்லை. தகுதி, திறமைக்காகவே கூறியிருந்தாலும், எல்லோரும் அப்படி மாறிவிட்டால், அதற்குரிய கல்லூரிகள் இருக்கின்றனவா? அப்படிப் பார்த்தாலும் சேர்ப்பு முறையைத் தெளிவிக்க ஒரு திட்டம் வேண்டும். அந்தத்திட்டத்தில் பின்னணி வகுப்பாருக்கு சலுகை வேண்டியதுதானே!

ஆச்சாரியாருக்கு, நம் இனத்தின் மீது எவ்வளவு கவலை! எத்தனை அக்கரை!

சலுகைகள் அதிகம் காட்டிவிட்டால் நாம் தன்னம்பிக்கையிழந்து விடுவோமாம்! கண்ணீர் பெருக்கெடுத்தோடுகிறது, அவருக்கு!

மாநில மாநாடு

★

தி. மு. க. மாநில மாநாட்டின் ஆரம்ப வேலைகளைச் செய்ய, மாவட்டந் தோறும் ரூ. 2000 தரவேண்டும் என்று தீர்மானித்தபடி, வசூலித்து அனுப்ப, நன்கொடை ரசீதுகள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன.

அச்சானவுடன் மாவட்டச் செயலாளர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

முதலில் பெரிய சுவரொட்டிகள் அச்சிட்டு அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநாட்டுச் சித்திரப் பகுதிக்கான வேலைகளும் மிக விரைவில் துவங்க இருக்கிறது.

சொந்த முயற்சியால் முன்னுக்கு வரமுடியும் என்பதையே 'மறந்துவிடுகிறோமாம்—அவர் அக்கரை சமுத்திரத்திற்கு 'அக்கரையே' தெரியவில்லை!

புண்பட்ட இதயத்தோடு, புலிகளென மக்கள் திரிந்திடும் நேரத்தில், இம்மாதிரி பேசுவது கூடாது!

ராபர்ட்ஸ் குரலின் உண்மையை உணர்ந்து மக்கள் உரிமைப் போர் எழுப்பும் காலம் இது. மத்திய ஆட்சிக்கு அடிக்கடி இந்தப்பேரிடி விழுந்தபடி யுள்ளதைப் பார்க்கிறோம்.

இந்நேரத்தில் சமூக நீதியின் கடைசி அத்தியாயத்தைப் படித்துவிட்டு ஆத்திரத்தோடு பலரும், ஆயாசத்தோடு சிலரும் உலவும் நேரம் இது!

இப்பொழுது ஆச்சாரியார் நரி நடையிலே, நாவை அசைக்கிறார்.

இத்தனையும் கூறிவிட்டு, இப்படிக்கூறுவதை தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்கிறார் அவர்,

அவருக்கே தெரியும், தாம்கூறும் சொற்கள் கூர்ஈட்டிகள் என்பது!

ஆனாலும் அவர் இனத்தின் பாதுகாவலராயிற்றே — எப்படிக்கூறாமலிருக்கமுடியும்!

நாம், தவறாக எதையும் எடுத்துக் கொள்ளவில்லை! அவர் தம் இனத்தின் ஈடேற்றத்திற்கானவற்றையே கூறியுள்ளார் என்பதையுணர்கிறோம்.

அவர் அது தவிர வேறு எதையும் கூறமுடியாது — கூறமாட்டார் என்பதை நாம் அறிவோம்.

தவறாக எப்படி எடுத்துக் கொள்ளமுடியும்! ஆச்சாரியார் நாட்டோருக்குத் தெரியாதவரல்ல — நாட்டையும் அவர் நன்றாகஅறிவார்.

சலுகைகளுக்கு அவர் காட்டும் அறிவுரை, அவர் நிலையிலுள்ளோருக்குப் பொருத்தந்தான்— இதிலே என்ன தவறு காணமுடியும்!

விருந்து முடித்து, வெளியிலே வருகிறவனுக்கும், விருந்துக்காக, இடித்து மோதிக்கொண்டு உள்ளே செல்பவனுக்கும் வித்தியாசம் உண்டு.

ரயிலில் ஏறி, படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டிருப்பவனுக்கும், வண்டி புறப்படும் நேரத்தில் அவசர அவசரமாக ஏறிடுவோனுக்கும் நடக்கும் உரையாடல் நாம் கேட்காததல்ல!

ஆகவே ஆச்சாரியார் பேச்சு நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை —அவர் அப்படித்தான் பேசுவார்! அவர் ரயிலில் ஏறி படுத்திருக்கும் பிரயாணி இனத்தைச் சேர்ந்தவர்.

ராபர்ட்ஸ், அந்தந்தப் பகுதியிலே ஆட்சி புரிவோர் கையிலேயே கல்வி நிலையங்களின் நிர்வாகப் பொறுப்பு இருக்கவேண்டும் என்றார்.

மத்திய ஆட்சிப் பொறுப்பிலே ஆச்சாரியார் இருந்தால் நகராட்சியிடம் அதிகாரம் இருந்தால் என்ன,

(5-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

முடியும். அவனல்? சுயநலச்சுரண்டலுக்கு ஒத்துநிக்கிடக்க அவன் ஒதியமரமல்லவே — மனிதனுச்சே! அதுவும் ஏதாவது ஊராருக்குச் செய்யவேண்டும் என்கிற நல்மனது கொண்டவனுச்சே!

* * *

"பிரிந்து சென்றோர் வேறு கொள்கைக்காகப் போய் வேலை செய்யவில்லை. சிலரது போக்கு பிடிக்காததால் விலகினர். அவர்கள் அப்படிச் செய்யாமல் பழைய ஸ்தாபனத்திலிருந்தபடியே நாட்டு நன்மைக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஏன் அவர்களுக்கோர் தனிக் கட்சி?"

ஒரே இடத்தில் உழைத்துக் கொண்டிருந்தோர் பிரிந்து போய் பிறிதொரு ஸ்தாபனம் அமைத்துக் கொண்டு பணி புரிகிறார்கள்.

தனி ஸ்தாபனம் அமைத்துக் கொண்டார்கள். ஆனல் வேறு திட்டங்களுக்காகப் பணி புரியவில்லை அவர்கள்.

பிரிந்துதான் வந்துவிட்டோமே யென்பதற்காக அவர்கள் வேறு காரியங்களில் ஈடுபட்டுவிடவில்லை. வழக்கம்போல அவர்கள் பணி நடைபெறுகிறது. வழி, மாறவில்லை.

'மக்கள் வாழ்வை நிமிர்ப்பதே எமது பணி' என்று முன்பு கூறினேமே யென்பதற்காக, பிரிந்து விட்டோர் 'மக்கள் வாழ்வை சீர்குலைப்பதே எமது நோக்கம்' என்று சொல்லவில்லை. அப்போது எந்த இலட்சியத்தைத் தமது தாரக மந்திரம் என்றனரோ அதைத்தான் இப்போதும் உரைக்கின்றனர்.

இருந்தும் ஜூன் 27ந் தேதி விஜயவாடாவில் பேசிய காங்கிரஸ் பொதுக் காரியதரிசி காளா வெங்கட்ட ராவ், நாம் தடித்த எழுத்திலே குறிப்பிட்டிருப்பது போலப் பேசியிருக்கிறார்.

"தனிக் கட்சி ஏன்?" என்று கேட்டிருக்கிறார். "தாய் ஸ்தாபனத்திலிருந்து வேலை செய்வதற்கென்ன?" என்று கோபித்துக் கொண்டிருக்கிறார்.

காங்கிரசிலிருந்து விலகி வேறு கட்சி அமைத்துக் கொண்டிருக்கும் கிருபளானி குழுவினர், தாம் முன்பிருந்த தாய் ஸ்தாபனத்திலிருந்து விலகியதற்கு, நாம் கதையிலே குறிப்பிட்ட சின்னத்தம்பியைப் போலக் காரணங்கள் சொல்லுகின்றனர் — நல்லமுத்து, பொதுச் சேவையை மறந்து சுயநலக்காரராகி விட்டார் என்று குறை சொல்லுகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டையே காரணமாகக் காட்டி, புதுக் கட்சி அமைத்திருக்கின்றனர். புதுக்கட்சி அமைத்திருப்போர், பொறுப்புள்ளவராக நடப்பரா, நாம் கதையிலே குறிப்பிட்ட சின்னத்தம்பியைப் போன்றோர்தானா என்பது பொறுத்துப் பார்க்கவேண்டிய விஷயம்— எதிர்காலம் கணிக்கவேண்டிய 'ஜாதகம்!'

ஆனல், காளாவோ, கிருபளானியின் மீது சீறுகிறார். 'புதுக் கட்சி ஏனும்!' என்று பொருமுகிறார்.

"ஒரே தலைமையின் கீழிருக்காமல் உதிரிகளாவதா?" என்று ஓங்கிய குரலில் கேட்கிறார். "ஒரே கட்சியாக இல்லாமல் எதற்காகவாம் இந்தத் தனிக்கட்சி? அதுவும், அதே கொள்கைகளைப் பேசிக்கொண்டு!" என்று ஆத்திரப்படுகிறார்.

ஆத்திரம், ஆவேசம், அங்கலாய்ப்பு ஆகியவைகளைக் கண்டு நமக்கு அனுதாபமே வருகிறது — பொதுக்காரியதரிசியார்மீது.

அன்பர் காளாவுக்குத் தமது கட்சி சீர்குலைவதைக் காணும்போது தனது கட்சித் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தோர் தொகை குறைந்து தேய்வதைத் தினசரிப் பார்க்கும்போது ஆத்திரமும் குமுறலும் எழும்பத்தான் செய்யும்.

ஆனல் அதெல்லாம் இப்போது எழும்பி என்ன பிரயோஜனம்?

தனது கட்சிமீது தனது கட்சியிலிருந்தோருக்கே அதிருப்தி வளர்கிறது என்று தெரிந்தபோதே, அந்தத்துவாரத்தை அடைப்பதற்கான வழிவகைகளைக் கண்டிருக்க வேண்டும்.

புகாரும், தூற்றலும் காங்கிரஸ் மீது எழும்பிவிட்டதுஎன்பதுணர்ந்ததுமே அவைகள் மறைவதற்கான வழிவகைகளைச் செய்திருக்கவேண்டும்.

கப்பல் தலைகீழாகத் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டபிறகு 'ஐயோ'! என்று அலறுவதால், என்னபயன்!

* * *

ஒரே கட்சி

ஒரே தலைமை

இந்த வார்த்தைகளை காங்கிரஸ் பொதுக் காரியதரிசி மட்டுமல்ல வேறு சிலரும் பேசுகிறார்கள் — வெப்பிய மனதோடு சிலசமயங்களிலும், பேராசையுள்ளத்தோடு வேறு சில நேரங்களிலும்.

கிருபளானியின் கட்சியோ, புதிது—புதிரானது.

அது துவக்கப்பட்டு சின்னுட்கள்தான் ஆகியிருக்கின்றன. எனவே காளா, புத்திமதிகளாலும் போதனைகளாலும் மீண்டும் அவர்களை காங்கிரஸ் கூடாரத்துக்குள் கொண்டு வரவேண்டுமென்னும் ஆசையாலும் ஏதேதோ பேசுகிறார்.

* * *

சின்னத்தம்பி, செட்டியாரை விட்டுச்சென்றபிறகு, பொதுப் பணியே தனது இலட்சியம் என்று கருதி, அறிவுப் படிப்பகம் ஒன்றை அமைத்துவிட்டான். அங்கே ஏராளமான மக்கள் வந்துகூடவும், பாராட்டவுமான வகையில் அவனது அறப்பணி வளர்ந்துவிட்டது. அதைக்காணும் நல்லமுத்தார், தனது ஓட்டலில் வியாபாரம் குறைந்துவிட்டது, லாபம் முன்போல இல்லையென்பதற்காக, மீண்டும் 'சின்னத்தம்பியே! என் ஓட்டலும் பொதுப்பணிக்காக ஆரம்பிக்கப்பட்டதுதானே. ஏன் படிப்பகம்வைத்து நடத்தவேண்டும், நீ? வா, வந்துவிடு. ஓட்டலுக்கு உன் படிப்பகத் தோழர்களை வாடிக்கைக்காரர்களாக்கிக்கொள்ளலாம்' என்று அன்போடு அழைத்தால், சின்னத்தம்பி போயாவிடுவான்? அதிலும் கஷ்டநஷ்டத்தோடுதான் வளர்த்த அறிவு நூலகத்தை ஓட்டலோடு 'சமாப்தி' செய்ய அவனென்ன அறிவு இல்லாதவனு?

* * *

கட்சி—என்பது இன்னாது தலைமையில் தான் இயங்கக்கூடியது, அவரை விட்டுவிட்டால் வளராது, அவரோடுதான் இருக்கவேண்டும்,

என்ற பேச்சுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. நல்லெண்ணம், ஒரு கட்சியின் வளர்ச்சி. தியாக உள்ளம், அந்தக் கட்சியைக் கோட்டையாக்கும். தி—மனது, சுயநலமில்லாத பண்பு, மக்கள் பணி ப நம் கடன் என்கிற ஒப்பா ஆசை, ஆகியவைகளோடு நிர்மாணிக்கப்படும், கோட்டை அது. அந்தக் கோட்டையை அமைப்பதென்பது இலேசான காரியமல்ல. நாட்டில் வாழும் பல கோடி மக்களின் இதயங்களிலும் தனது கொள்கைகளை அக்கட்சி, புகச் செய்வதென்றால் அதற்கெனப்படவேண்டிய கஷ்ட நஷ்டங்களும் சாமான்யமல்ல.

கூட்டத்திலேறிப் பேசுகிறார், அக்கட்சித் தோழர்.

'ஆகா! எவ்வளவு நன்றாகப் பேசுகிறார்' என்று பலர் புகழலாம். 'அவனுடைய திமிரைப் பார். எல்லாம் உளறல். அவன் சொல்லுவதெல்லாம் பொய்' இப்படி சிலர் இகழலாம்.

இகழ்ச்சி—புகழ்மாலை, இந்த இரண்டையும் புன் சிரிப்போடு தாங்கி, தனது பொதுப் பணியை செவ்வனே நடத்தி, மக்கள் மனதில் மறையாத நல்லெண்ணத்தைப் பெறுவதென்பது சாதாரண காரியமல்ல.

ஆனால், இதை சாத்யமாக்கிக் கொண்டுவிட்டது, ஒரு கட்சி என்றால், அந்தக் கட்சியைத் தன் வலைக்குள்ளிழுத்துப் போட வாய் ஜாலத்தையும் வாத்சல்யத்தையும் காட்டினால் மயங்கியாவிடுவர், மார்பிலே வேலைத் தாங்கி கண்ணீர் சிந்தி, பிறகு கட்சி துவங்கியோர்?

* * *

கிருபளானி, தமது மனம் புண்பட்டதால் புதுக் கட்சியை ஸ்தாபித்திருக்கிறார். அவருள்ளத்திலே தியாக நினைவும், காங்கிரஸ் சீரழிந்ததைப்போல நமது கட்சியும் ஆகக் கூடாது, உண்மையாகவே சேவை செய்யவேண்டும் என்கிற ஆசையுமிருந்தால், மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டுமானால், அது, அவர் வகுத்துக்கொள்ளும் வழிகளிலும் திட்டங்களிலும் இருக்கிறது. உண்மையான உள்ளத்தோடு, தனது முந்தைய ஸ்தாபனத்திலிருந்த ஊழல், சுயநலப் போாசை, ஆகியவைகளை உள்ளபடியே ஒழித்தால், அவரது பொதுப்பணி மதிப்புப் பெறும். ஆனால், அவரோ—இன்றுவரையில் ஒரு புதிராகத் தென்படுகிறார், நமக்கு.

நாம் அவர் பற்றி கொண்டிருக்கும் கருத்து வேறு.

ஆனால் காளா அவர் பற்றி கொண்டிருக்கும் ஆத்திரம் வேறு.

கிருபளானி புதுக் கட்சி அமைத்ததால், காங்கிரசிலுள்ள சீர்குலைவுகள், நமக்குத் தென்பட்டிருக்கின்றன.

'இதெல்லாம் வெளியாருக்குத் தெரிவதா?' என்கிற வேகம், காளாவை, வெந்தணல் போன்ற வார்த்தைகளை வீசச் செய்திருக்கிறது.

இப்போது வீசி என்ன பயன்!

கட்சி பிரியுமுன்னரே அது பிரிய முடியாதபடி தடுத்து, பிரிய விரும்பியோரைச் சமாதானப்படுத்தியிருந்தால், அது விவேகமான காரியம்.

அதை விட்டுவிட்டு, புதுக் கட்சி துவங்கி அது தனது வேலைத் திட்டத்தையும் வெளியிட்ட பிறகு வெகுண்டெழுவதும், 'தனிக் கட்சி ஏன்?' என்று பேசுவதும், வீண் வேலை.

இத்தகைய கேடு தனது கட்சிக்கு வரும் என்று தெரிந்தபோதே அது வாராதபடி தடுத்திருக்க வேண்டும்—அது புத்திசாலித்தனமான காரியம். அதைவிட்டு விட்டு இப்போது புலம்புவதால் பயன் என்ன! முன்பல்லவோ இருந்திருக்க வேண்டும்—இப்போது வந்திருக்கும் விவேகமும் புத்திச்சாலித்தனமும்?

★

"தேவகி"

தன்னைச் சுற்றி நடக்கும் காட்சிகள், குடும்ப வாழ்க்கையின் கோலாகலங்கள், பணத்திமிரின் விளைவு ஆகியவைகளையே இன்று மக்கள் காண விரும்புகிறார்கள் என்பதற்கோர், சான்று, வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் "தேவகி"

பாமர மக்களின் இதயத்தை உறுக்கிவிடும், கதை, தோழர் மு. கருணாநிதியின் முற்போக்கு எண்ணங்களால் மெருகேற்றப்பட்டிருக்கிறது.

எனினும், அவரது அழகு வசனங்களுக்குக் கொடுக்க வேண்டிய அளவு முக்கியம், கொடுக்கப்படவில்லை. உதாரணமாக தேவகி வாழ்வை வெறுத்து கண்ணம்பாடி அணையிலிருந்து கீழேவிழப் போகும் நேரத்தில் பேசும் பேச்சுகள், நமது எண்ணங்களை கிளறும் வகையில் படமாக்கப்படவில்லை. "பொன்னையும் மண்ணையும் அள்ளிச் செல்லும் உன் நீர்த்தோள்களிலே—அன்னை காவிரி என்னையும் எடுத்துச்செல்" என்கிற வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் பேசும் 'தேவகி'யைக் காட்டுவதற்குப் பதில், தண்ணீரைக் காட்டுகிறார், டைரக்டர்.

கதாசிரியரது உள்ளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எடுக்கப்பட்டது தான், 'வேலைக்காரி', 'மந்திரிகுமாரி' முதலிய படங்களின் வெற்றிக்கான இரகசியம். இந்த விஷயம்பற்றி நன்கு அறிந்த மாடர்ன் தியேட்டர்ஸ் நிர்வாகிகள், ஏனோ 'தேவகி' விஷயத்தில் தவறிவிட்டனர்.

எல்லோரும் நன்கு நடித்துள்ளனர். மாதுரிதேவி, கடைசியில் அவர் பேசும் வார்த்தைகள், நம் காதுகளில் ரீங்காரமிட்டவண்ணமே உள்ளன. ஒலிப் பதிவும், இசையும், இன்னும் நன்றாக இருந்திருக்கலாம். பொதுவில், பாமர மக்களுடைய கண்ணீரையும் கவனத்தையும் கவரக்கூடிய திரைப்படம், 'தேவகி'.

மும்மணிகள்

பெரிய இடத்துப் பெண் 0—8—0
(மு. கருணாநிதி)

கோலைகாரி 0—12—0
(ஏ. வி. பி. ஆசைத்தம்பி)

சாம்பாஜி 1—0—0
(ஏ. கே. வேலன்)

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு.

விவரங்களுக்கு:-

திராவிடன் பதிப்பகம்

த. பெ. எண் 18

(A) வேலூர் (N. A.)

தொடர் கதை

யாத்திரை

தில்லை—வில்லாளன்

3

அம்மாவுக்கு

பத்மா

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. 'பித்துக்குளி ராசாக்கள்' கோயிலோடு தாயை ஒப்பிட்டார்களே! கோயிலிலே என்னம்மா இருக்கிறது, பேசாது, ஆடாது! அதற்குமுன் திரைவிட்டிருக்கிறான் தரகன். தாயைப் பார்க்கத்தவிக்கும் பிள்ளைகளின் சிலரை உள்ளே அனுமதிக்கிறான். சிலருக்கு அனுமதி கிடைப்பதில்லை. கொட்டுமுழக்கம், அதிர்வேட்டு, வாண வேடிக்கை, தேர், திருவிழா, ஆடம்பர ஆட்டங்கள், பாட்டங்கள், கும்மாளம், கூத்து, கொண்டாட்டம்.......எல்லாம் உண்டு சிலைக்கு. ஆனால் அந்த ஆண்டவன் பெற்ற பிள்ளைகளுக்குச் சோறில்லை உண்ண, உடையில்லை உடுக்க, இடமில்லை தங்க! இந்த விசித்திர விளையாட்டுக்களமான கோயிலுடன் தாயை ஏன் ஒப்பிட்டார்கள்?

குழந்தை யழப் பொறுக்கமாட்டாள். தன் குழந்தைக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு தான் இல்லாமையால் வாடுவாள். அதனால் பெருமையடைவாள், பிள்ளைகளிடம் பிச்சைகேட்டு தான் மகாராணியாக ஆசைப்படமாட்டாள், கோயிலிலே இருக்கும் கல்லுத்தாயைப் போல! தாயன்பிற்கு குறுக்கேதாகில்லை, தகிடுதத்தம்ஏதுவுமில்லை.

தாய் தெய்வம்........

அவளுடன் வாழ்வது கோயிலில் கால்வலிக்க வலம்வந்து வரம் வாங்கும் பக்திமார்க்க வாழ்க்கை.

இருந்தாலும் அம்மா, என்னைப் பொறுத்தமட்டில் தாய் ஒரு தவறைச்செய்ய என்னை வற்புறுத்திய சர்வாதிகாரியாகத் தோன்றுகிறாள். என் தாயும் தெய்வந்தான்........

ஆனால் காளி, திரிசூலி, மாரி, காட்டேரி என்ற மட்டரகம்போலவே நினைக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலைமைக்கு விரட்டப்பட்டுவிட்டேன். அம்மா, நீ என் மன அமைதியைக் கெடுத்துவிட்டாய். உன் அன்புத் தொல்லையால் நான் சஞ்சலத்தை, சலனமிழந்த பாலைவனத்துன்பத்தை மணந்துகொண்டேன்.

அன்புத்தாயே, நான் இழந்தது சுந்தரையல்ல. சுகத்தை! அடைந்தது பார்த்திபனையல்ல, பூர்த்தி செய்யமுடியாத சோகத்தை...... இத்தனைக்கும் காரணம் என்தாய்

> [ஓடிய கதை:— சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திருமணத்திற்கு வரமுடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினான் பத்மாவின் தங்கை, லீலாவின் இளந்தோழி மங்கை. அவள் வாழ்விலேயும்ஒரு புயல்...தெப்ப உற்சவம் பார்க்கச் சென்ற இடத்தில் தினகரனைச் சந்திக்கிறாள். அவனே அவளை வஞ்சித்து விட்டான்.]

என்கிறபொழுது நான் அழுகிறேன் அழுதுகொண்டேயிருக்கிறேன்.

ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன......

என்வாழ்க்கையில் துளியும் இன்பம் இல்லை. நிம்மதியில்லை. நான் அவரை ஏமாற்றுகிறேன். அவர் என்னை ஏமாற்றுகிறார். இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்கிறோம். பாம்பைக் கண்டு மனிதன் பயப்படுகிறான். மனிதனைக்கண்டு பாம்பு அஞ்சியோடுகிறது! பாம்பால் மனிதனைக்கொல்ல முடியும். மனிதனாலும் பாம்பை அடித்துச் சாகச் செய்ய இயலும்.

அப்படித்தான் அம்மா, எங்கே என் மனதிலே ஊஞ்சலாட்டம் போடும் எண்ணங்களை அவர் கண்டுவிடுகிறாரோ என்று அவரைக்கண்டு அஞ்சுகிறேன். அவரும் அதுபோலவே என்னைக்கண்டு பயப்படுகிறார். நினைத்தால் இருவரும் மோதிக் கொண்டு வாழ்க்கையைச் சுக்கு நூறாக்கிக்கொள்ளமுடியும்! செய்யவில்லை. எங்கள் படிப்பு எங்களைக் காப்பாற்றுகிறது.

என்ன பத்மா, புதிர் போடுகிறாய் விபரத்தைக் கூறாமல் என்று கேட்பாய். நான் அங்கு வரும்பொழுது இருவரும் எவ்வளவு குதூகலமாய் இருக்கிறீர்கள்........இப்படி விடுகதை போடுகிறாய் என்று கடிந்து கொள்வாய்......ஆம், அம்மா! இது ஒரு இரகசியம். யாரிடமும் சொல்லிக்கொள்வதில்லை. போகவேண்டிய ரயில்வண்டியைத் தவறவிட்டுவிட்டு, வேறொரு கட்டை வண்டியில் பிரயாணம் செய்கிற நான் பழைய புகைவண்டிக் கதையைப் பேசிப் பயன் என்ன?

பத்மாவும் பார்த்திபனும் கணவனும் மனைவியும் ஆக்கப்பட்டுவிட்டார்கள். அதற்காகத்தானே ஒற்றைக்கால் தவமிருந்தாய், அம்மா! ஊராரின் கண்களில் நாங்கள் காதல் சிட்டுகள்......உங்கள் முன்னால் இணைபிரியா இளந்தம்பதிகள்! ஆனால் உண்மையில் அப்படியில்லையம்மா.........!

மணமாகி முதன் முதல் சந்தித்த பொழுது அவர் என்னைப் பார்க்கக் கூட விரும்பவில்லை. பேசினார் பிறகு, வேறு வழியில்லையே என்ற காரணத்தால்! நானும் தான் திக்குமுக்காடினேன். பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆகவே எங்கள் இயந்திர வாழ்க்கையைத் தொடங்கினோம். திருமணம் என்றால் 'தசையாசை' விழா என்றால் நாங்கள் மணந்துகொண்டோம் உண்மையில் என்று அர்த்தம்,

மணம் என்றால் மனங்கள் தழுவல் என்றால் நாங்கள் இன்னும் மணமக்களாக மாறவில்லை யென்றுதான் சொல்வேன்.

ஆம். அம்மா......அவர் ஏதோ எனக்குத் தெரியாமல் ஒரு சஞ்சலத்தை அனுபவிக்கிறார்! எனக்குப் புரியவில்லை. அந்தத் துயரம் என்னிடம் சொல்லக் கூடாதது மட்டுமல்ல, என் கண்பார்வைக்கும், கருத்துத் தேடலுக்கும் எட்டாத இடத்தில் நடந்தது, நடக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரிகிறது.

இங்கு நான்கு உறுப்பினர்கள் ஒரு குடும்பத்திற்கு! தம்பதிகள் இருவர், வீட்டு வேலைகளைக் கவனிக்க ஒரு இளம் பெண் பொன்னி, அவரது வயதான தந்தை அன்பானந்தர்......ஒவ்வொருவரும் வெவ்வேறு நாடகங்களில் வரவேண்டிய கதாநாயக, நாயகிகள்! ஆனால் இங்கு ஒரு நாடகத்தில் முக்கிய பாத்திரங்கள் நால்வரும் சேர்ந்து கொண்டோம்.

பார்த்திபன் வழக்கறிஞர்........ ஊரிலே மிகக் கெட்டிக்காரர் பட்டம்—ஆனால் தந்தைக்கு முன்னால் பெட்டிப் பாம்புதான். அந்த அடக்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் அது ஒரு சமூகக் கோழையாக்குகிற அளவு போகக் கூடாது என்பதுதான் என் ஆசை. தந்தை சொற் கேளாமல் தறிதலையாக, 'தடிமாடாக' திரியவேண்டும் என்று சொல்கிறேன்! இல்லை!...அடக்கம் வேண்டும், அடிமையாகக் கூடாது! என் மாமனார் அப்படியொன்றும் 'தப்புத் தண்டாவாக' நடக்கும் படித் தன் பிள்ளையை ஏவிவிட மாட்டார். அவர் நல்லவர். அன்பாகப் பேசுவார். குடும்பக் காரியங்களைத் தான் குடு குடு கிழமானாலும் தவக்கமின்றி தடுமாற்றமின்றி முடிப்பதில் கெட்டிக்காரர். அவர் 'ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர்' அல்லவா?

பொன்னி சின்னஞ் சிறுவயதில் அவ்வீட்டிற்கு வந்தவள். அந்த வீட்டில் பெண் குழந்தையில்லாத குறையை அவள் நிறைவு செய்து கொண்டிருந்தாள். அவள் அந்நிய சாதியைச் சேர்ந்த அனாதை யென்றாலும் அன்பாக நடத்தப்பட்டாள். என் மாமி இறக்கும் பொழுது பொன்னிக்கு எல்லா ஆதரவும் காட்டவேண்டும் என்று என் 'அவரிடம்' உறுதி வாங்கிக்கொண்டு இறந்தார்களாம். அதனால்தான் அவள் வீட்டு இராணியாக நான் வந்தும் இன்னமும் இருக்கிறாள். அவள் என்னிடம் ஒரு சகோதரியைப் போலவே நடந்து கொள்கிறாள். பொன்னியிடம் எனக்கு அளவு கடந்த அன்பு— அவளுக்கு பத்மா என்றால் உயிர்!

அவர் திங்களுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பாதிக்கிறார். அழகான 'பாண்டியாக்' இருக்கிறது.

இருந்தும்......பெருமூச்சு விடுகிறேன!

ஏன்?

சுகம்...சோகம்!

இரண்டும் வெவ்வேறு திசை நோக்கிச் செல்கின்றன. மனித சாதி சுகத்தை நோக்கி யாத்திரை செய்துகொண்டே இருக்கிறது. சுகம் எங்கே? அதோ இயற்கை விரித்திருக்கும் நீலப்படுதாவின் விளிம்பிலே மறைந்து கிடக்கிறது. தொடுவனத்தின் அடியிலே சுகம் பதுக்கப்பட்டிருக்கிறது. அடிவானத்தை மனிதன் அடைந்ததே இல்லை யென்கிறார்களே, அப்படியானால் சுகத்தை மனிதன் இதுவரை எட்டிப் பிடித்ததே யில்லையா?...... 'ஏழைக்கு ஏது இன்பம்'...என்கிறார்களே சுகம் பெற பணம் வேண்டுமா? பதவியிருந்தால் சுகத்தை எட்டிப்பிடித்து விடலாமா? வானம் பூமியைத் தொடுவது போல ஒரு பிரமை யென்கிறார்கள்......அப்படியானால் சுகம் உலகில் இல்லையா?

சுகம் ஒரு சுந்தரமான சொல்... அது குறிப்பிடும் நிலைமை பணத்தால் வருவதில்லை. பதவியால் பெறுவதும் இல்லை.

மனிதப் பயிர் ஒவ்வொன்றும் சுகம் என்ற கதிரை விட ஆசைப்படுகின்றது என்பது மட்டும் என்னவோ உண்மை! அந்தக் கதிர் கிடைக்காமல் பல இடையூறுகள் உண்டாகின்றன...இருப்பினும் சுகம் தளிர்கிறது, கருகிவிடுகிறது. மீண்டும் தோன்றுவது போலத் தெரிகிறது. மறைகிறது!

ஆனால் சோகம் எல்லோரிடமும் குடியிருக்கிறது. வானத்தில் உள்ள நட்சத்திரங்களை எண்ண முடிகிறதா......அப்படித்தான் சோகம் எல்லோர் வாழ்விலும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

அம்மா, நான் பார்த்திபனின் சொத்து! ஆனால் சுந்தர் இன்னமும் மணம் முடிக்காமல் திரிகிறாரே...அந்த காட்சியே என் இதயத்தைக் கிழித்தெறிகிறது. என்னால் ஒரு வாலிபன் வாட்டப் பதுமையாகி விட்டாரே! அதனைச் சகிக்க முடியவில்லையே, அம்மா!

உன் கட்டளைப்படி சுந்தருக்கு மறுப்புரை வழங்கினேன். கடிதத்தில் வெறுப்பைக் கொட்டியிருந்தேன். கருத்தில் சுந்தரிடம் துளியும் வெறுப்பில்லையே, விருப்பமல்லவா குடிகொண்டிருந்தது. என் திருமணப் பத்திரிக்கையைப் பார்த்து என்ன நினைத்திருப்பார்? அவர் மனம் எரியும் தீயாகியிருக்காதா? அவர் எண்ணம் எரிமலையாகியிருக்காதா? திருமணக் கொண்டாட்டம் அவருக்கு சாவுக்குறிகளையல்லவா சொல்லியிருக்கும்?

அம்மா, ஐந்தாண்டுகள் கழித்து இந்த அவலச் சுவை மிகுந்த வாழ்க்கையைச் சொல்கிறேன். மன்னித்துக்கொள்.

என் திருமணத்திற்குப் பிறகு சுந்தரை இருமுறை சந்தித்தேன்...... பார்த்தேன்......பதைத்தேன்...... திகைத்தேன்..........தேம்பியழுதிருக்க வேண்டும். அந்த அளவிற்குத் 'தெம்பு' இல்லை. லீலாவைப் பார்ப்பதாகப் பொய்கூறி அவர் நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருந்த ஊருக்குச் சென்றுவந்தேன். அவரைப் பார்ப்பதிலே என் மனதிற்கு ஒரு ஆறுதல்........ஆனால் அதே நேரத்தில் அவருக்கு என் தோற்றமே துயரத்தின் ஊற்றுக்கண் போலும்! என்னைப்பார்க்கும் பொழுது அவர் கண்கள் தாமே இமைகளுக்குள் புகுந்து மறைந்து கொண்டு, கண்ணீரால் கதவடைப்பு செய்து கொண்டன.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M. A. at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.